ஈழக்காண்பி என்பது ஈழத்தமிழருக்கான ஓர் உறுப்புக்கட்டணத் திரையோடைத் தளமாகும்.

eelamplay.com

2022 தைப்பொங்கல் முதல் உங்கள் வீடுகளில் ஒளிபரப்ப....

ஈழக்காண்பி (Eelamplay) என்பது ஓர் உறுப்புக்கட்டணத் திரையோடைத் தளமாகவும் (streaming platform) ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனமாகவும் விளங்குகிறது.

இங்குள்ள நூற்றுக்கும் அதிகமான திரைப்படங்களை ஆயிரக்கணக்கான இணைய வசதி கொண்ட சாதனங்களில் பார்வையிட முடியும்.

ஒவ்வொரு மாதமும், வேறெங்கும் கிடைக்காத தனித்துவமான குறைந்தது ஒரு புதிய படைப்பு வெளியிடப்படும். நீங்கள் விரும்பும் அளவுக்கு, எப்போது வேண்டுமானாலும் பார்க்கமுடியும்.

Last edited 04.12.2021 (V. 1.3)

Disclaimers:

- All product names, logos, trademarks, service marks and brands are property of their respective owners
- The information contained in this report is of a general nature and is not intended to address the circumstances of any particular individual or entity. No one should act on such information without appropriate professional advice after a thorough examination of the particular situation.
- Although we have attempted to provide correct and timely information, there can be no guarantee that such information is correct as of the date it is received or that it will continue to be correct in the future.
- The report contains information obtained from the public domain or external sources which have not been verified for authenticity, accuracy or completeness.
- Use of companies' names in the report is only to exemplify the trends in the industry. We maintain our independence from such entities and no bias is intended towards any of them in the report.
- By reading the report the reader shall be deemed to have accepted the terms mentioned above.

ஈழத் தமிழ் அடையாளங்களுடனான கலைப்படைப்புகள் அருகிவரும் இக் காலகட்டத்தில்,
இளையோர் தம் வேர்களையும் அடையாளங்களையும் அறிந்து கொள்ளக்கூடிய தனிவேறான படைப்புகள்,
மூத்தோர் தமது பசுமையான நினைவுகளையும் வாழ்வியலையும் மீட்டிக்கொள்ளக்கூடிய தயாரிப்புகள்
போன்ற பல தனித்துவமான தன்மைகளுடன்...

eelamplay கணக்கு வைத்திருக்கும் ஒருவர் இணைய உலாவிகளில் eelamplay.com எனும் முகவரியிலும், இணையவசதி கொண்ட Smart TVs, Smartphones மற்றும் Tablets போன்றவற்றில் எமது eelamplay App ஊடாகவும் பார்வையிடலாம்.

இணைய வசதி இல்லாத இடங்களில் எமது App இன் ஊடாக நீங்கள் முற்கூட்டியே தரவிறக்கம் செய்துவைத்திருக்கும் படைப்புகளைத் தடையின்றிப் பார்க்கமுடியும்.

TV Apps

Amazon Fire TV App
Android Tv App
Apple TV App
LG TV App
Roku Channel App
Samsung TV App

Mobile Apps

Android App
iOS App

Browsers

Chrome
Edge
Firefox
Opera
Safari

Video Quality

4K
2K
HD
SD

Audio Quality

5.1 surround sound
Dolby Atmos

Languages

English
Tamil

Adaptive Bitrate (ABR) Streaming

Defeat buffering. Deliver over any network and adjust content quality on the fly in line with each user's bandwidth.

Digital rights management (DRM) protection

Digital rights management (DRM) tools or technological protection measures (TPM) are a set of access control technologies for restricting the use of proprietary hardware and copyrighted works.

eelamplay.com

ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஒரு புதிய படைப்பு வெளியிடப்படும்.

உங்கள் கணக்கிற்குள் குழந்தைகளுக்கென தனிவேறான உபகணக்கை ஆரம்பிக்க முடியும். இவற்றைப் பெற்றோர்கள் கண்காணிக்கக் கூடியதாகவும் இருக்கும். வயதெல்லைக் கட்டுப்பாடு, குறித்த படைப்புகளைத் தடுத்தல் போன்ற விடயங்கள் பெற்றோர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

எமது படைப்புகள் தமிழ், ஆங்கிலம் (English), பிரெஞ்சு (Français), ஜேர்மன் (Deutsch) மற்றும் இத்தாலிய (Italiano) மொழிகளிலான துணைத்தலைப்புகளுடன் வெளியிடப்படும்.

வேற்றுமொழித் திரைப்படங்கள் தமிழ்த் துணைத்தலைப்புகளுடன் வெளியிடப்படும்.

600,000
150,000
15,000
புலம்பெயர் ஈழத்தமிழர்கள்
≈600,000
புலம்பெயர் ஈழத்தமிழ்க் குடும்பங்கள்
≈150,000
சந்தாதாரர் இலக்கு
≈15,000
eelamplay.com

eelamplay ஊடாக சந்தாதாரராக இணையும் போது வங்கிப் பற்றட்டை விபரங்கள் எதுவும் eelamplay இற்கு கிடைக்கமாட்டாது. நிதிப்பரிவர்த்தனையை மேற்கொள்வது அமெரிக்காவையும் அயர்லாந்தையும் மையமாகக் கொண்டியங்கும் ஸ்ரைப் (Stripe) எனும் பிரபலமான நிறுவனமாகும்.

பணம் வைப்பான பின்னர் தங்களின் பெயரும், மின்னஞ்சல் முகவரியும், மொத்தத் தொகையும் மட்டுமே எமக்கு ஸ்ரைப் நிறுவனத்தால் தெரியப்படுத்தப்படும்.

சந்தாதாரராக இணைந்து கொண்டதும் தங்களுக்கும் ஒரு மின்னஞ்சல் தானியக்கமாக அனுப்பப்படும்.

சந்தாதாரராக இணைந்து கொள்ள பின்வரும் இணைய நிதிப்பரிவர்த்தனை முறைகள் மற்றும் வங்கிப் பற்றட்டைகளைப் பயன்படுத்த முடியும்.

PAYMENTS PROCESSED BY:

PayPal stripe

CARDS ACCEPTED:

VISA MasterCard AMERICAN EXPRESS DISCOVER Diners Club INTERNATIONAL JCB

eelamplay இல் ஒரு மாத சந்தாதாரராக இணைந்து கொள்ள ஒவ்வொரு நாட்டிலும் கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டணம் அறவிடப்படும். ஒரு தடவை சந்தாதாரராக இணைந்த பின்னர் குறிப்பிட்ட காலப்பகுதியில் வேறு எவ்விதக் கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. eelamplay இல் கணக்கை இரத்துச் செய்ய எந்தக் கட்டணமோ, ஒப்பந்தமோ, பொறுப்போ கிடையாது. உங்கள் கணக்கை எமது இணையத்திலோ அல்லது App இலோ எளிதாக இரத்துச் செய்யலாம். எப்போது வேண்டுமானாலும் உங்கள் கணக்கைத் தொடங்கவும், நிறுத்தவும் இயலும்.

Australia	19,99	AUD	Netherlands	15,99	EUR
Belgium	17,99	EUR	New Zealand	24,99	NZD
Canada	18,99	CAD	Norway	159,00	NOK
Denmark	129,00	DKK	Singapore	21,98	SGD
Finland	15,99	EUR	Sweden	179,00	SEK
France	17,99	EUR	Switzerland	21,90	CHF
Germany	17,99	EUR	UK	13,99	GBP
India	159,00	INR	USA	17,99	USD
Italy	17,99	EUR	Eelam	0,00	Free
Malaysia	55,00	MYR	Other Countries	17,99	USD

குறிக்கோள்:

ஈழ நிகழ்வுகளில் நாட்டம் கொள்ளவேண்டிய உலகளாவிய பார்வையாளர்களுக்குரிய திரைத் தயாரிப்புகளை ஓரிடப்படுத்தி, அவற்றை வகைப்படுத்தி, தரமாகவும் இலகுவாகவும் அவர்களுக்குக் கிட்டும் வகை செய்யும் அதேவேளை, உறுப்புக்கட்டணத்தில் கிடைக்கும் வருவாயைக்கொண்டு விடுதலையை நோக்கி ஈழத்தமிழ்த் தேசத்தை நகர்த்தும் நோக்கில் ஈழத்துக்கதைகளை உலகத்தரத்தில் சென்றடைய வேண்டிய பார்வையாளர்கள் வியந்து நுகரும் வண்ணம் தயாரிப்பாளர்களையும் கலைஞர்களையும் இயங்கச் செய்து தரமான படைப்புகளை வெளிக்கொணரல்.

தொலைநோக்கு:

அடக்குமுறைக்கு உள்ளாகி விடுதலைக்காகப் போராடத் துணிகின்ற ஒரு தேசமோ அல்லது மக்களோ, உலக ஒழுங்கில் தமக்கென்று ஒரு நாடோ, சர்வதேச ஆதரவுத் தளமோ, ஊடக பலமோ இல்லாதுவிடினும் தனித்துவமான திரைத்துறை ஒன்றை உருவாக்கித் தமது விடுதலைப் பயணத்திற்கான கருத்தியலை வெற்றிகரமாக உருவாக்க முடியும் என்ற மன உறுதியைச் சமூகம் சார்ந்த கலைஞர்களுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் ஏற்படுத்தவல்ல, உலகளாவிய ஒரு முன்னுதாரணமாகத் திகழ்தல்.

பெறுமானங்கள்:

எமது அரசியல், சமூக விடுதலைக்கான தெளிவுநிலையும் கடப்பாடும் பற்றுறுதியும், எமது தேடலால் விரிவாக்கப்படுகின்ற பண்பாட்டு விழிப்புணர்வு, நுண்ணறிவு, புத்தாக்கத்திறன் ஆகியவற்றால் பலம்பெறுகின்றன.

ஈழக்காண்பி (Eelamplay) பற்றிய அறிமுகம்:

ஈழக்காண்பி (Eelamplay) என்பது ஓர் உறுப்புக்கட்டணத் திரையோடைத் தளமாகவும் (streaming platform) ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனமாகவும் விளங்குகிறது.

ஈழத்தமிழர்பற்றி இதுவரை வெளியாகியுள்ள குறும்படங்களும் முழு நீளத் திரைப்படங்களுமாக ஏறத்தாழ ஐம்பது திரை மற்றும் ஆவணப் படைப்புகளை உலகளாவிய பார்வையாளர்கள் ஓரிடத்தில், இலகுவாகவும் தரமாகவும் பார்க்கக் கூடியதாக ஒருங்கமைத்து ஈழக்காண்பி (Eelamplay) தனது OTT முறையிலான திரையோடைத் தளத்தில் வழங்க உள்ளது.

ஈழத் திரைத் தயாரிப்புகளுக்கு அப்பால் உறுப்புரிமைப் பார்வையாளர்களுள் வெவ்வேறு வயதினருக்குத் தேவையான பொதுத் தமிழ்ப் படைப்புகளும் அவர்களின் நுகர்வுத் தேவை கருதி இங்கு உள்ளடக்கப்படும்.

கணினிக்கான இணைய உலாவிகளிலும் (Web browsers), தொலைக்காட்சி மற்றும் திறன்பேசிக்கான இரண்டு விதமான இயங்கு தளங்களுக்கான (iOS, Android) செயலிகளாகவும் (Apps) தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிப் பயன்பாட்டுக்கு உரிய வகையிலான மென்பொருட் தீர்வாக 2022 ஜனவரி 14 ஆம் நாள் ஈழக்காண்பி வெளியாகவுள்ளது.

இவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு அடுத்த தலைமுறைப் புலம்பெயர் இளந்தலைமுறையினரின் புரிதலை மேம்படுத்துவதற்காக அவர்கள் சிந்திக்கும் மொழிகளிலும் துணைத் தலைப்புகள் வழங்க ஈழக்காண்பி ஒழுங்குகளை மேற்கொண்டிருக்கிறது. ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் இத்தாலிய மொழிகளில் இந்தப் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஈழத்தமிழர்கள் மொழி, மத மற்றும் பண்பாட்டு ரீதியாக என்றென்றும் மதிப்போடு உயர்ந்து நோக்கும் ஆரம்பகாலத் தென்னிந்தியத் திரைத் தயாரிப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் ஐம்பது திரைப்படங்களையும் தரமான முறையில் ஈழக்காண்பி தன்னகத்தே உள்ளடக்கவுள்ளது.

ஈழத்தமிழர் பாரம்பரியக் கலைவடிவங்களை ஒளிப்பதிவாக்கிப் பேணுவதோடு அவற்றைப் பரந்த பார்வையாளர்களிடம் எடுத்துச்செல்வதற்கான சில முயற்சிகளையும் ஈழக்காண்பி முன்னெடுக்கும் அதேவேளை, தமிழ்ச் சிறார்களுக்கான சில சிறப்புப் பதிவுகளையும் சிறுவர் நிகழ்ச்சிகள் என்ற தலைப்பில் மேற்கொள்ளவிருக்கிறது.

இவற்றுக்கும் அப்பால் ஈழத்தமிழர்களின் திரை ஈர்ப்பை உலகத் தரத்தில் வளம்பெறச்செய்ய உதவக்கூடியவை என்று ஈழக்காண்பி கருதுபவற்றுள் திரையோடைத் தளத்தில் உள்ளடக்கும் உரிமையைப் பெற்று வெளியிடக்கூடிய ஒரு சில பிற மொழித் திரைப்படங்களுக்குத் தமிழில் துணைத்தலைப்புகளைத் தரமான மொழி நடையிலும் உரிய அணுகுமுறையிலும் வழங்கி வெளியிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இங்கே வெளியாகும் திரைத் தயாரிப்புகள் உரிய வெளியீட்டு உரிமை பெற்றவை. தயாரிப்பாளர்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அவை இங்கு சேர்த்துக்கொள்ளப்படும். இவ் ஒப்பந்தங்களின் படி தயாரிப்பாளர்களுக்கும் வருவாயில் ஒரு பகுதி சென்றடையுமாறு ஈழக்காண்பியின் வியாபாரத்திட்டம் அமைந்துள்ளது.

ஈழக்காண்பியானது, ஈழத் திரைப் படைப்புகளை நுகர்வோரின் நலன்களைப் பேணுவது போல தயாரிப்பாளர்களதும் கலைஞர்களதும் மேம்பாட்டைப் பேண வேண்டும் என்பதையும் தனது தலையாய நோக்காகக் கொண்டுள்ளது. இந்த வகையில், தயாரிப்பாளர்களுக்கான சந்தைப்படுத்தலை இலகுவாக்கி அவர்களின் தயாரிப்புகளைத் தரமாகவும் விரைவாகவும் பலரை ஒரே நேரத்திற் சென்றடையும் வண்ணம் சந்தைப்படுத்தி ஊக்குவிப்பதும் முக்கியமாகிறது. திருட்டு வழிகளில் திரைப்படங்களைப் பிரதி செய்து வெளியிடும் தவறான சந்தை ஈழத் தயாரிப்புகளைப் பாதிக்காத வகையிலும், அதேவேளை நுகர்வோருக்கு நேர்மையாகவும் ஈழக்காண்பி விளங்கும்.

இங்கு வெளியாகும் படைப்புகள் திருட்டுக்கு உள்ளாக்கப்பட்டால் அவற்றைத் தடுக்கும் தொழிநுட்ப ஆற்றலையும் சட்ட ஒழுங்குகளையும் ஈழக்காண்பி தன்னகத்தே கொண்டுள்ளது. பார்வையாளர்களுக்குச் சிறந்த அனுபவத்தைக் கொடுப்பதோடு புலமைச்சொத்துத் திருட்டுப் போன்றவற்றை தவிர்க்கும் பொருட்டே உலகத்தரம் வாய்ந்த OTT தளங்களில் (Netflix) பயன்படுத்தப்படும் தொழிநுட்ப உத்திகளுக்கு நிகரான அணுகுமுறைகளை ஈழக்காண்பியும் பயன்படுத்துகிறது.

ஈழத் திரைத் தயாரிப்பாளர்கள், தமது வருவாய் பாதிக்கப்படும் என்ற அச்சமின்றி பிரத்தியேகமான சிறப்புத் திரையிடல்களை ஈழக்காண்பியில் மேற்கொள்வதென்பது ஈழக்காண்பி திட்டமிட்டுள்ள உறுப்புரிமை நிறைவெண்ணை (critical mass) அடையும்போது சாத்தியமாகிவிடும். எனினும், ஈழக்காண்பியின் உறுப்புரிமை வீச்சுப் பலம் பெறும் வரையான காலத்தில், நிகழ்நிலைத் திரையோடித்தளத்தில் ஒரு படைப்பு வெளியாக முன்னர் மெய்நிலைத் திரைப்படவிழாக்களிலும், திரையரங்குகளிலும் பகிரங்கத் திரையிடலை மேற்கொண்ட பின்னரே இங்கு தமது படைப்புகளை

வெளியிடவேண்டும் என்ற எண்ணம் தயாரிப்பாளர்களுக்கு இருக்கும் என்பதை ஈழக்காண்பியின் ஆரம்பகாலக் கட்டண உறுப்பினர்கள் புரிந்துணர்வோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர் தாயகத்துக்கு அப்பால் உலகளாவிப் பரந்து வாழும் பார்வையாளர்களிடம் அறவிடப்படும் உறுப்புரிமைக்கட்டணமே ஈழக்காண்பியின் பராமரிப்புக்குரிய அடிப்படை வருவாய்க்கான மூலம் ஆகிறது. இதனால், 2021 ஆம் ஆண்டு முடிவுக்குள் உறுப்புரிமைக்கட்டணம் செலுத்தும் சுமார் இரண்டாயிரம் பார்வையாளர்களைப் பெற வேண்டும் என்பது ஈழக்காண்பியின் இலக்கு ஆகிறது. இக் காரணத்தினாலேயே ஈழக்காண்பியின் உறுப்புரிமைக்கான அடிப்படை நிறைவு எண்ணை அடையும் வரை ஒரு வருடத்துக்கான உறுப்புரிமைப் பணத்தை முற்கூட்டியே பார்வையாளர்கள் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனை கையாளப்படுகிறது. இது குறித்த புரிந்துணர்வை இலாப நோக்கற்ற ஒரு பொது நோக்கு முயற்சி என்ற வகையில் ஈழத்திரையின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பார்வையாளர்களிடம் ஈழக்காண்பி எதிர்பார்க்கிறது. குறித்த உறுப்புரிமை நிறைவெண்ணை எய்தியதும் மாத உறுப்புரிமை செலுத்தித் தமது உறுப்புரிமையைத் தொடரும் வாய்ப்பை பயனாளர்களின் நலன் நோக்கி ஈழக்காண்பி நிச்சயமாக நல்கும்.

இலாப நோக்கற்ற முன்னெடுப்பு என்ற அடிப்படையில் ஈழக்காண்பியில் விளம்பரங்கள் தவிர்க்கப்படவேண்டும் என்பது கொள்கை சார் முடிவாக உள்ளது. எனவே, பார்வையாளர்களுக்கு இங்கே விளம்பர இடையூறுகள் இருக்காது.

ஈழக்காண்பியின் ஆரம்பத் திட்டமிடலின் போதே இம் முன்னெடுப்பைப் பலப்படுத்தத் தாமாகவே முன்வந்து தயாரிப்பாளர்கள் சிலர் தமது படைப்புகளை இலவசமாக உள்ளடக்கி ஊக்குவித்தனர். அதேவேளை, இந்தத் திட்டத்தின் நோக்கைத் தெரிவித்த போது இதிலே இணைந்துகொள்ள இதர தயாரிப்பாளர்களிற் பலரும் முன்வந்தார்கள்.

உருவாக்கத் திட்டமிடல்:

2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்த முயற்சி திட்டமிடப்பட்டு இதற்குரிய இணைய முகவரியாக eelamplay.com பதிவு செய்யப்பட்டது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதியும் தமிழர் திருநாளுமான தைப் பொங்கல் நாளன்று திரையோடைத் தளம் உறுப்புரிமைப் பார்வையாளர்களுக்குத் திறந்து விடப்படும் பொழுது இதுவே ஈழத்தமிழர்களுக்கான முதலாவது தனித்துவமான திரையோடைத் தளமாக வெளிவருகின்றது.

eelamplay.com
தபால் முகவரி:
Postboks 31 Kalbakken
0901 OSLO
Norway
மின்னஞ்சல் முகவரி:
info@eelamplay.com
இணையத்தளம்:
eelamplay.com
ஈழக்காண்பி என்பது ஈழத்தமிழருக்கான ஓர் உறுப்புக்கட்டணத் திரையோடைத் தளமாகும்.